திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, அன்று சாலையிலிருக்கின்ற அரசாங்க எஸ்டேட்டில் 'ஐந்து நட்சத்திர ஓட்டல்' கட்டப்படலாமென்று முன்பு அறிவித்திருந்தார்கள். அப்படிப்பட்ட திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

திரு. ஜி. ராமசாமி: தலைவரவர்களே, டெல்லியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமேதேனும் உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட திட்டமேதும் இல்லை.

குளித்தலை வட்டத்திலுள்ள சிவாயம்குளம்

*253 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை வட்டம், சிவாயம் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் எப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) காலதாமதத்திற்கு உரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 1963-ம் ஆண்டு.

(இ) இத்திட்டத்திற்கான ரூ. 5.63 லட்ச மதிப்பீடு அரசினல் 1973-ஆம் ஆண்டு டிசம்பரில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(உ) திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு திருத்தங்கள் தேவைப்பட்டதாலும், நிலங்களின் அளவு வேறுபாடுகளை சரிபார்த்ததிலும் அதிகாரிகள் முடிவான அறிக்கை அரசுக்கு ஏப்ரல் 1973-ல் தான் கிடைக்கப்பெற்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த அளவுக்கு புதுப்பிக்கின்ற திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டதா? வேலை துவங்கப்பட்டதா? அடிக்கல் நாட்டப்பட்ட இடத்திற்கும் குளத்திற்கும் எவ்வளவு தூரம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அடிக்கல் நாட்டப்பட்ட இடத்திற்கும் குளத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்ற தகவல் என்னிடமில்லை. வேலைகள் விரைவில் துவங்கப் பெறும்.